



# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 26.2021 மலர்:10 இதழ்:15

# தீபாவளியையொட்டி, அரசு தொழிலாளர்களுக்கு போனஸ், கருணைத் தொகை வழங்கப்படும்

# தாதா சாகேப் பால்கே விருது பெற்றார் ரஜினிகாந்த்

## பொறியியல் முதலாமாண்டு மாணவர்களுக்கு நவம்பர் 1 முதல் வகுப்பு-அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு




தீபாவளியையொட்டி, அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 23.10.2021 அறிவித்துள்ளார். இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தொழிலாளர்களின் உழைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. இவர்களின் உழைப்பால்தான் நாடு சிறப்பான பொருளாதார வளர்ச்சியை அடைந்து வருகிறது . தமிழ்நாடு அரசின் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் வகையில், இந்த ஆண்டு தீபாவளித் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு 2021 2021ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கிடத் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். கோவிட் 19 தொற்றுநோயின் முதல் அலை காரணமாக மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி மிகவும் குறைந்து இருந்த நிலையில், கோவிட் 19 இரண்டாவது அலையின் காரணமாக, பொருளாதார விளைவுகள் அரசின் நிதிநிலையை மேலும் பாதித்துள்ளது. குறிப்பாக, அதிகமான எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பணிபுரியும் அரசு நிறுவனங்களான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் பல நிறுவனங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, ஏறத்தாழ அனைத்து வணிக நடவடிக்கைகள், குறிப்பாக, பொதுத்துறை நிறுவனங்களின் வணிகம் மற்றும் செயல்பாடுகள், பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து முழு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட போனஸ் சட்டம் 2015 ன் படி, போனஸ் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூபாய் 21,000 என உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி போனஸ் கணக்கிட இருந்த மாதாந்திர சம்பள உச்சவரம்பும் ரூபாய் 7,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி 2021 2021 ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும். லாபம் ஈட்டியுள்ள மற்றும் நட்டம் அடைந்துள்ள அனைத்து அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஸீ மற்றும் ம் பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33% போனஸ் மற்றும் 1.67% கருணைத் தொகை என மொத்தம் 10% வரை போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும். இதனால் போனஸ் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூபாய் 8,00 பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2 லட்சத்து 87 ஆயிரத்து 250 தொழிலாளர்களுக்கு 216 கோடியே 38 லட்சம் ரூபாய் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய திரையுலகினருக்கு மத்திய அரசினால் வழங்கப்படும் மிக உயரிய விருது தாதா சாகேப் பால்கே விருது, லதா மங்கேஷ்கர், சத்யஜித் ரே.ஷியான் பெனகல், அமிதாப் பச்சன் உள்ளிட்ட பலருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ் திரையுலகிலிருந்து சிவாஜி, கே.பாலசந்தர் ஆகிய இருவர் இந்த விருதினைப் பெற்றுள்ளார்கள் 2019ம் ஆண்டிற்கான தாதா சாகேப் பால்கே விருது ரஜினிகாந்த்துக்கு அறிவிக்கப்பட்டது. கரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த விழா நடத்தப்படாமல் இருந்தது, அக்டோபர் 25 டெல்லியில் 67 வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெற் து. இதில் ரஜினிக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு வழங்கினார், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், இணையமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். சமூக வலைத்தளத்தில் பலரும் ரஜினிக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.


## பொறியியல் முதலாமாண்டு மாணவர்களுக்கு நவம்பர் 1 முதல் வகுப்பு அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு




அண்ணா பல்கலைக்கழகம் 20.10.2021 வெளியிட்டுள்ள அறிவிப்பில், பொறியியல் முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் வரும் நவம்பர் 1 ஆம் தேதி முதல் தொடங்கும். நவமபர் 1 ஆம் தேதி முதல் முதலாமாண்டு மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் தொடங்கி நடைபெறும். இறுதியாண்டு மாணவர்கள் விடுதிகளைக் காலி செய்த பின் முதலாமாண்டு மாணவர்களுக்கு நேரடி வகுப்பு நடைபெறும். அடுத்தாண்டு மார்ச் 7 ஆம் தேதி முதலாமாண்டு மாணவர்களுக்கு செமஸ்டர் தேர்வு தொடங்கும். நடப்பு கல்வியாண்டு முதல் பொறியியல் படிப்புக்கு புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின் பெரும் பகுதி தொழில்துறையின் பங்களிப்பு இடம் பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு திறன்களை மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் புதிய பாடத் திட்டம் உருவாக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக முதலாமாண்டு மாணவர்களுக்கு நடப்பு கல்வியாண்டில் புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பல்கலைக்கழக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அதிமுகவில் சசிகலா? நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவு.-ஓபிஎஸ் பேட்டி





முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். வங்கியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் கையெழுத்திட்டு எடுக்கப்பட்ட தங்கக் கவசம் பசும்பொன் தேவர் நினைவிடப் பொறுப்பாளர் காந்தி மீனாளிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர், ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியதாவது "மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் ஆரம்பித்த இந்த இயக்கம் தொண்டர்களால் வளர்க்கப்பட்ட இயக்கமாகவே இன்றளவும் உள்ளது. அதிமுக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற அடிப்படையிலேயே கட்சி செயல்பட்டு வருகிறது. மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என, நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். தற்போது பொறுப்பிலுள்ள திமுக அரசு எந்தத் திட்டங்களையும், நிறுத்தாமல் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் . கடந்த அதிமுக அரசின் திட்டங்களை நிறுத்தினால் நாங்கள் சட்டபூர்வமாகப் போராடுவோம். அம்மா உணவகத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த சப்பாத்தி நிறுத்தப்பட்டது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ளேன். தொடர்ந்து அம்மா உணவகத்தில் வழங்கப்பட்டு வந்த உணவுகளை வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.அரசியலில் யார் வேண்டுமானாலும் வரலாம். அதை ஏற்பதும், ஏற்காததும் மக்களின் முடிவு. அதிமுக தொண்டர்களின் இயக்கம். இரட்டைத் தலைமையின் கீழ் கட்சி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சசிகலாவைக் கட்சியில் சேர்ப்பது குறித்து, தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசித்து முடிவு எடுப்பார்கள்" இவ்வாறு ஓபிஎஸ் தெரிவித்தார்.



# தென் மாவட்டங்களில் ஒரு வாரகால சுற்றுப்பயணத்தை தொடங்கினார் சசிகலா



சசிகலாவை அதிமுகவில் சேர்ப்பது தொடர்பாக அந்த கட்சியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வரும் நிலையில், தொண்டர்களை சந்தித்து ஆதரவு திரட்டுவதற்காக ஒரு வாரகால அரசியல் சுற்றுப்பயணத்தை சசிகலா தொடங்கியுள்ளார். மதுரையில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், சசிகலாவை கட்சியில் சேர்ப்பது குறித்து தலைமை கழக நிர்வாகிகள் முடிவு எடுப்பார்கள் என்றார். அவரின் இந்த கருத்தால் கட்சியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளரான எடப்பாடி பழனிசாமி, சசிகலாவை அதிமுகவில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை என்று உறுதிபட கூறியுள்ளார். இதனால் அதிமுகவில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையில், சசிகலா கட்சி தொண்டர்களை சந்தித்து ஆதரவு திரட்ட ஒரு வாரகால அரசியல் சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ளார். சென்னை தியாகராய நகரில் உள்ள இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட அவருக்கு ஆதரவாளர்கள் ஆரத்தி எடுத்து வழி அனுப்பி வைத்தார்கள். தஞ்சாவூர் செல்லும் வழியில் சசிகலா 25 இடங்களில் தொண்டர்களை சந்திக்கிறார். தஞ்சையில் இன்று இரவு தங்கும் சசிகலா, நாளை டிடிவி தினகரன் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். 28 ம் தேதி மதுரை செல்லும் சசிகலா, முத்துராமலிங்க தேவர் மற்றும் மருது சகோதரர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்கிறார். 29 ம் தேதி ராமநாதபுரத்தில் தொண்டர்களை சந்திக்கிறார். 30ம் தேதி காலை பசும்பொன்னில் முத்துராமலிங்க தேவர் குரு பூஜையில் பங்கேற்கும் சசிகலா, அன்றைய தினமே தஞ்சை திரும்புகிறார். நவம்பர் 1 ம் தேதி தஞ்சையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் சசிகலா, ஆதரவாளர்களை சந்திக்கிறார். இதன்பின்னர் திருநெல்வேலி உள்பட மேலும் சில மாவட்டங்களுக்கும் அவர் செல்ல உள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் சசிகலாவின் இந்த ஒரு வார கால அரசியல் சுற்றுப்பயணம் தொண்டர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நீதிபதி கூறிய கருத்துகள் என்னைப் புண்படுத்தின

# நடிகர் விஜய் தரப்பு வாதம்



வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என நடிகர் விஜய் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் சமீபத்தில் தீர்ப்பு வழங்கிய தனி நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம், வழக்கைத் தள்ளுபடி செய்ததோடு நடிகர் விஜய்க்கு ஒரு லட்சம் அபராதமும் விதித்தார். மேலும், தீர்ப்பில் சில கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்திருந்தார். இதையடுத்து வரி பாக்கியைச் செலுத்திய விஜய்இ தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்ட கருத்துகளை நீக்க வேண்டும் எனச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. தனி நீதிபதி கூறிய கருத்துகள் தன்னை தனிப்பட்ட முறையில் புண்படுத்தின எனக் கூறிய விஜய் தரப்பு, கஷ்டப்பட்ட உழைப்பில் கார் வாங்கப்பட்ட நிலையில்இ அதை நீதிபதி விமர்சித்திருப்பது தேவையற்றது என்றும் தெரிவித்தது. மேலும், வரிவிலக்கு கோருவது என்பது சட்டப்பூர்வமான நடவடிக்கை என்பதால்தான் இந்த வழக்கைத் தொடர்ந்ததாகவும் விஜய் தரப்பு தெரிவித்தது. இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள் இந்த வழக்கைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

# ஐபிஎல் தொடரில் புதிதாக அகமதாபாத், லக்னோ:பிசிசிஐ அறிவிப்பு..




ஐபிஎல் டி20 தொடரின் 15 வது சீசனில் புதிதாக அகமதாபாத், லக்னோ அணிகள் களமிறங்குகின்றன. இதற்கான டெண்டரில், இந்த அணிகளை 12,000 கோடிக்கு பிரபல நிறுவனங்கள் வாங்கின. 2022 ஐபிஎல் சீசனில் கூடுதலாக 2 அணிகளை சேர்க்க முடிவு செய்த பிசிசிஐ, இதற்கான டெண்டர் நடைமுறையை கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் வெளியிட்டது. விண்ணப்ப கட்டணம் 10 லட்சமாகவும், அடிப்படை விலை 2,000 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 22 நிறுவனங்கள் சார்பில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், புதிய அணிகளுக்கான டெண்டர் திறப்பு துபாயில் நேற்று நடந்தது. இதில் பிசிசிஐ நிர்வாகிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் முடிவில், ஆர்—பி சஞ்சீவ் கோயங்கா (ஆர்பிஎஸ்ஜி) குழுமம் லக்னோ அணியையும், சிவிசி கேப்பிடல் பார்ட்னர்ஸ் அகமதாபாத் அணியையும் வாங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆர்பிஎஸ்ஜி குழுமம் முன்னதாக ரைசிங் புனே சூப்பர்ஜயன்ட் அணியின் உரிமையாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.லக்னோ அணியை ஆர்பிஎஸ்ஜி நிறுவனம் சுமார் 7,000 கோடிக்கும், அகமதாபாத் அணியை சிவிசி கேப்பிடல் சுமார் 5,200 கோடிக்கும் வாங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து, ஐபிஎல் 15 வது சீசனில் மொத்தம் 10 அணிகள் விளையாட உள்ளன. இந்த அணிகளுக்கான மெகா வீரர்கள் ஏலமும் விரைவில் நடைபெற உள்ளது.

# ஆசை வார்த்தைகளை நம்பி கட்சியைவிட்டுச் செல்வது துரோகம்-விஜயகாந்த் உருக்கம்.



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல், தற்போது நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் தேமுதிக, முந்தைய தேர்தல்களில் பெற்ற வாக்குகளைவிடக் குறைந்த வாக்குகளையே பெற்றிருந்தது. நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளின் எதிரொலியாக அண்மையில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் கட்சித் தொண்டர்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், உண்மை, உழைப்பு, நேர்மையை நம்பி நாம் தேர்தலை எதிர்கொண்டோம். அதிகார பலம், பணபலம் ஆகியவற்றை மீறித் தேர்தலில் நின்றோம். வெற்றி, தோல்வி சகஜம், நமக்கான காலம் நிச்சயம் வரும், எனக் கூறியிருந்தார். இதனையடுத்து, தேமுதிகவிலிருந்து பல நிர்வாகிகள் வேறு கட்சிகளில் இணையும் போக்கு அதிகரித்துவந்தது, இந்நிலையில், தேமுதிக தலைவர் விஜயகாந்த் மீண்டும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், மூளைச்சலவை செய்வோரின் ஆசை வார்த்தைகளை நம்பி தேமுதிகவை விட்டுச் செல்வது கட்சிக்குச் செய்யும் துரோகம். கட்சியை விட்டுச் செல்பவர்கள் இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பதை உணரும் நாள் வரும். எனது உடல்நிலையில் சற்று தொய்வு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதற்காக தேமுதிகவுக்கு எதிர்காலமே இல்லை என யார் நினைத்தாலும் அது தவறு. 100 ஆண்டுகள் ஆனாலும் தேமுதிகவை யாராலும் அழிக்க முடியாது என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

அகர முதல
உரக்க சொல்வோம்
Aagaramuthalaa
அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?.
இப்போது 50-க்கும் மேற்பட்ட
கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும்
கார் வாடகைக்கு
மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
உரக்க சொல்வோம்
Aagaramuthalaa
மின்னிதழ்
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 26,2021 | மயிலாடுதுறை | மலர்:10 இதழ்:15

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் சார்நிலை கருவூல அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்

## மயிலாடுதுறையில் 40 கோடி கடன் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்.




மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் நடைபெற்ற சிறப்பு வாடிக்கையாளர் தொடர்பு திட்ட முகாமில் ரூ.40கோடி மதிப்பிலான கடனுதவியை 500 பயனாளிகளுக்கு வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது.சிறப்பு வாடிக்கையாளர் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் மயிலாடுதுறை மாவட்ட அனைத்து பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் சார்பில் தொழில்கடன். கல்விக்கடன், தாட்கோ கடன், சுயஉதவிக்குழு கடன், வீட்டு கடன், வாகனக் கடன், விவசாயக் கடன் போன்ற கடனுதவிகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது. அரசின் கடனுதவி திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பாலமாக இருப்பது வங்கிகள் மட்டுமே. அந்தவகையில் தற்போது இளைஞர்கள் சுயதொழில் தொடங்குவதற்கான அரசின் திட்டங்களை சமூக வலைதளங்கள் மூலம் விளம்பர படுத்தினால், இந்த கால இளைஞர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும். மாவட்ட தொழில் மையம், தாட்கோ போன்றவைகள் இளைஞர்கள் சுயதொழில் செய்வதற்கான வழிகாட்டு முறைகளை விளம்பரப்படுத்த வேண்டும். மேலும் வங்கிகள் மூலம் பெறப்படும் கடனுதவிகளை பெறுபவர்கள், முறையாக செலுத்தி, தொடர்ந்து வங்கி பரிவத்தனைகளை மேற்கொண்டு, தங்களது தொழில் வளர்ச்சியை பெருக்கிக்கொள்ள வேண்டும் பொதுத்துறை வங்கிகள் மூலம் சாலையோர வியாபாரிகளுக்கான கடன் வழங்கும் திட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டம் முதன்மையாக திகழ்கிறது. இன்றையதினம் ரூ.40 கோடி மதிப்பிலான கடனுதவிகளை சுமார் 500 பயனாளிகளுக்கு வழங்கும் பணி தொடங் கப்பட்டடுள்ளது. மக்கள் அரசின் திட்டங்களை அறிந்துபயன்டுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார்.முன்னதாக கண்காணிப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியா அவர்கள் தலைமையில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து இந்தியன் வங்கி திருக்களாச்சேரி கிளையில் அகில இந்திய அளவில் அடல் பென்ஷன் திட்டத்தின் 1000 க்கும் மேற்பட்ட பயனாளிகளை இணைத்தமைக்காகவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பூம்பகார் கிளை அரசின் கடன் திட்டங்களை மக்களிடம் சிறப்பாக செயல்படுத்தியமைக்காகவும், இந்தியன் வங்கி சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் கிளையின் மூலம் அப்பகுதிகளில் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் சிறப்பாக செயல்படுத்தியமைக்காகவும் மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா வங்கி மேலாளர் மற்றும் வர்த்தக மேலாளர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார். பின்னர் மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் மயிலாடுதுறை மாவட்ட அனைத்து பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் 22 கிளைகள் சார்பில் தொழில்கடன் கல்விக்கடன், தாட்கோ கடன், சுயஉதவிக்குழு கடன், வீட்டு கடன், வாகனக் கடன் விவசாயக் கடன் என 500 பயனாளிகளுக்கு மொத்தம் .40 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் ஸ்ரீ.பி.சுரேஷ், பார்த ஸ்டேட் வங்கியின் நாகப்பட்டினம் மண்டல மேலாளர் பிரபாகரன், முன்னோடி வங்கி மேலாளர் முத்துசாமி, மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் கமலக்கண்ணன், நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் பிரபாகரன், மகளிர் திட்ட இயக்குநர் கவிதாபிரியா, தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்ட அலுவலர் அறிவழகன், மாவட்ட நிதிசார் கல்வி ஆலோசகர் ஸ்ரீநிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மினி மாரத்தான் போட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
## துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்



மயிலாடுதுறை மாவட்டத்தில் நீத்தார் நினைவு தினத்தை முன்னிட்டு மயிலாடுதுறை காவல்துறை சார்பில் நடைபெற்ற மினி மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் பரிசுகளை வழங்கினார். இந்திய சீன எல்லைப் பகுதியில் 1959 ஆம் ஆண்டு நடந்த மோதலில் எல்லை பாதுகாப்பில் ஈடுபட்ட 20 இந்திய காவலர்கள் வீரமரணம் அடைந்தனர். அந்த சம்பவத்தை நினைவு கூறும் வகையில் கடந்த அக்டோபர் 21 ஆம் தேதி மயிலாடுதுறை காவல் நிலையத்தில் நீத்தார் நினைவு நாள் காவல்துறை சார்பில் கொண்டாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது. இந்த மாரத்தான் போட்டியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் என 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். தொடர்ந்து மயிலாடுதுறை மணிக்கூண்டு பகுதியில் தொடங்கிய இந்த மினி மாரத்தான் போட்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார். சுமார் ஐந்து கிலோமீட்டர் நடைபெற்ற இந்த மினி மாரத்தான் போட்டியில் காவல்துறையினரும் பங்கேற்று மாணவர்களை ஊக்குவித்தனர். இறுதியில் முதல் மூன்று இடம் பிடித்த மாணாவர்களுக்கு காவல்துறை சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் காவல்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுகுணா சிங் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜன், காவல் ஆய்வாளர் செல்வம், எஸ்பி தனிப் பிரிவு காவல் ஆய்வாளர் சதீஷ் மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் காவல் துறையை சார்ந்த அனைத்து பிரிவு காவலர்கள் பங்கேற்றனர்.

## மயிலாடுதுறையில் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தை கரும்பு விவசாயிகள் முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டம்




மயிலாடுதுறை மாவட்டம் தலைஞாயிறு என் பி கே கே ஆர் ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை திறக்க கோரி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பேரணியாக வந்து கண்டன ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை விவசாயிகள் சங்க மாநில செயலாளர் தங்க காசிநாதன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செயலாளர் கே. முருகன் முன்னிலை வகித்தார் . மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 1987 –ஆம் ஆண்டு திறக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டுவந்த என் பி கே கே ஆர் சர்க்கரை ஆலை நிர்வாக சீர்கேட்டினால் கடந்த ஐந்து ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. என் பி கே கே ஆர் ஆலை இயங்கியபொழுது, மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி, திருவிடைமருதூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விவசாயிகள் ஆலை தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்கள் , வர்த்தகர்கள் என அனைவருடைய வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்திலும் நல்ல வளர்ச்சி அடைந்தனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் இயங்கிவந்த ஒரே ஒரு கூட்டுறவு ஆலையும் மூடப்பட்டுவிட்டதால் இதனை நம்பி வாழ்ந்த விவசாயிகளும், ஆலை தொழிலாளிகளும் வர்த்தகர்ளும், விவசாய தொழிலாளர்களும் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். விவசாயத்திற்காக தனி நிதி நிலை அறிக்கை சமர்பித்து சிறப்பாக செயல்பட்டுவரும் தமிழக அரசு மூடப்பட்டுள்ள ஆலையை புனரமைத்து, கரும்பு அரவையை துவக்கவேண்டுமென வலியுறுத்தியும். இதற்கு மாறாக, நெல் சேமிப்பு கிடங்காக ஆலையின் வளாகத்தை பயன்படுத்த முயற்ச்சிக்கும் சில அரசு அதிகாரிகளின் முயற்ச்சியை தடுத்து ஆலையை திறந்து, தனியார் ஆலைகளின் கொள்ளைகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர். இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் துரைராஜ், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் முன்னேற்ற சங்க தலைவர் குரு. கோபி. கணேசன், டெல்டா பாசனதாரர்கள் சங்க பொது செயலாளர் அன்பழகன், இயற்கை விவசாயி ராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன், பாலகிருஷ்ணன், லிங்கேஸ்வரன், ஆகியோர் விளக்க உரை ஆற்றினர். இதில் 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## குத்தாலம் அருகே சரி இல்லாத சாலையில்
## நடவு செய்து எதிர்ப்பை தெரிவித்த பெண்கள்



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே கோனேரிராஜபுரம் ஊராட்சியில் வைகல் கிராமத்தில் சரியில்லாத சாலையை சரி செய்ய வேண்டும் என பலமுறை அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருந்தனர் இதனை எந்த ஒரு அதிகாரியும் கண்டுகொள்ளாத நிலைமையில் இருந்தது. சமீபத்தில் பெய்த மழை காரணமாக தார் சாலை என்று தெரியாத அளவிற்கு சாலை சேறும் சகதியுமாக இருந்தது இதனால் வாகனத்தில் செல்பவர்கள் மிகுந்த அவதிக்குள்ளானார்கள் இந்நிலையில் வைகல் கிராமத்தில் வெங்கட்ராமன் என்பவரது வயலில் சம்பா நடவு வேலைக்காக வெளியூரிலிருந்து வந்த பெண்கள் சாலையை பார்த்து மிகவும் மோசமான நிலையில் சாலைகளில் நீர் தேங்கியுள்ள இடங்களைப் பார்த்துவிட்டு இது சாலை அல்ல வயல் என நடவு செய்யும் காட்சி சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

## சின்னமேடு மீனவ கிராமத்தில் கடல் அரிப்பை தடுக்கும் வகையில்

# ரூ.9.78 கோடி மதிப்பீட்டில் நேர் கல் சுவர் அமைக்க பூமி பூஜை



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் காலமநல்லூர் ஊராட்சியில் சின்னமேடு மீனவ கிராமம் வங்க கடல் ஓரம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் இயற்கை காலநிலையால் ஏற்படும் புயல் மற்றும் கடல் சீற்றத்தின் போது கடல் நீரானது சுமார் 100 மீட்டர் ஊருக்குள் நுழைந்து மீனவ கிராம மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வந்தது. இதனால், தங்கள் கிராமத்தில் கடல் அரிப்பை நிரந்தரமாக தடுக்கும் வகையில் நேர் கல் சுவர் (குடுப்புச்சுவர்) அமைத்து தர கிராம மக்கள் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். சின்னங்குடி மீனவ கிராம மக்களின் கோரிக்கையை மீன் வளத்துறை மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணனிடம் பூம்புகார் எம்எல்ஏ தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் சின்னமேடு மீனவ கிராமத்தில் ரூ9.78 கோடி மதிப்பீட்டில் நேர் கல் சுவர் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான திட்டத்தை நிறைவேற்றும் வகையில் ஞாயிற்றுக்கிழமை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் பங்கேற்று அடிக்கல் நாட்டி , திட்டத்தை தொடக்கி வைத்தார். அடிக்கல் நாட்டு விழாவில், மீன்வளத்துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், நாகை வடக்கு மாவட்ட திமுக பொருளாளர் ஜி. என். ரவி, செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல்மாலிக், தரங்கம்பாடி வட்டாட்சியர் ஹரிதரன் மற்றும் அரசு அலுவலர்கள், மீனவ பஞ்சாயத்தார், கிராம மக்கள், திமுக பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இத்திட்டத்தினால் சின்னமேடு கிராமத்தில் கடல் அரிப்பும், கடல் நீர் உட்புகுவதும் தடுக்கப்படும் என்பதால் மிகவும் மகிழ்ச்சி அமைந்துள்ள சின்ன மேடு மீனவ கிராம மக்கள் தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின், மீன்வளத்துறை மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஆகியோருக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

## மயிலாடுதுறையில் பள்ளி வாகன கூட்டாய்வு சிறப்பு முகாமில்

# ஆட்சியர் லலிதா பள்ளி வாகனங்கள் பராமரிப்பு ஆய்வு




மயிலாடுதுறை மாவட்டம் மன்னம்பந்தல் ஏ.வி.சி கலைக்கல்லூரியில் நடைபெற்ற பள்ளி வாகன கூட்டாய்வு சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா பள்ளி வாகனங்கள் பராமரிப்பு குறித்து ஆய்வு செய்தார். தொடர்ந்து தீயணைப்பு துறை சார்பில் நடைபெற்ற வாகன தீவிபத்து பாதுகாப்பு ஒத்திகையையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது. பள்ளி வாகன ஓட்டுநர்கள் பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பில் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஒவ்வொரு குழந்தையையும் பள்ளி வாகனத்தில் பள்ளிக்கு அழைத்து வரும்போதும், திரும்ப வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது குழந்தைகளுக்கு முழு பாதுகாவலராக ஓட்டுநர்கள் இருக்க வேண்டும். வாகனங்களில் ஏற்படும் சிறுசிறு கோளாறுகளை உடனுக்குடன் சரிசெய்து வாகனங்களை நல்ல நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழக அரசின் வழிகாட்டுதல்படி பள்ளி வாகனங்களை ஆய்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் வருவாய் கோட்டாட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட கல்வி அலுவலர், வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் அடங்கிய குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவானது பள்ளி வாகன பராமரிப்பு ஆய்வில் ஈடுபடுகிறார்கள். தற்போது மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட 73 பள்ளிகளை சேர்ந்த 60 வாகனங்களின் பராமரிப்பு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

கொரோனா காலத்திற்கு பிறகு நீண்ட நாள் கழித்து பள்ளி திறக்கப்பட உள்ளதால் பள்ளி வாகனங்கள் சரியான முறையில் இயங்குகிறதா என்பதை ஒவ்வொரு ஓட்டுநரும் கவனித்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். முன்னதாக கல்லுாரி கூட்டரங்கில் பள்ளி வாகன ஓட்டுனர்களுக்கு சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.இந்நிகழ்ச்சி யில், வட்டார போக்குவரத்து அலுவலர் ப.நாகராஜன்,வருவாய் கோட்டாட்சியர் பாலாஜி, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வி.ராம்குமார், விஸ்வநாதன், மயிலாடுதுறை தீயணைப்பு நிலைய அலுவலர் முத்துக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை:மொட்டை மாடியில்

# நெல் நாற்றங்காலை வளர்க்கும் பொறியியல் பட்டதாரி இளைஞர்





மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா பெரம்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பொறியியல் பட்டதாரியான விவசாயி பாலமுருகன். இயற்கை ஆர்வலரான இவர் தனக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் நஞ்சில்லா பாரம்பரிய இயற்கை மூலிகை நெல் ரகங்களான ஆத்தூர் கிச்சிலி சம்பா, தூயமல்லி, கருப்புக்கவுனி போன்ற ரகங்களை விளைவிக்க விரும்பினார். பொதுவாக, வயலில் நாற்றங்கால் வளர்க்க வயலில் தண்ணீர் பாய்ச்சி, உழவடித்து, நிலத்தை சமன்படுத்தி, மேட்டுப்பாத்தி அமைத்து நாற்றங்கால் வளர்ப்பதைப் போல் இல்லாமல் தனது வீட்டு மாடியிலேயே நாற்றங்கால் வளர்ப்பது குறித்து யோசித்து அதற்கான நடவடிக்கையிலும் இறங்கியுள்ளார். முதற்கட்டமாக ஒன்றரை ஏக்கருக்கான ஆத்தூர் கிச்சிலி சம்பா, ஒன்றரை ஏக்கருக்கான தூயமல்லி நாற்றங்கால்களை மாடியிலேயே உருவாக்கியுள்ளார். சேறில்லா விவசாய முறையாக முற்றிலும் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயந்திர நடவுக்கான நாற்றுக்களை சேறுக்கு பதிலாக கருக்காய், தேங்காய் நார் கழிவு உரம், மரத்தூள் போன்றவற்றைக் கொண்டு பிளாஸ்டிக் ட்ரேயில் நெல் விதைகள் பரப்பி நாற்றுக்களை உருவாக்கியுள்ளார் . நாற்றுகளுக்கு தேவையான நீரை தெளித்து பாய்ச்சுகிறார். இதனால் நாற்றுக்கள் 17 நாள்களில் நாற்றின் வேர் பகுதி சேதமாகாமல், சேறும் சகதியும் இல்லாமல் அப்படியே எடுத்துசுருட்டி நடவுக்கு அனுப்புகிறார். இதனால், வயலில் நட்டால் நாற்றுக்கள் மழையில் மூழ்கிவிடுமோ என்ற அச்சம் இவருக்கு இல்லை. மேலும், வயலில் நாற்றங்கால் விடுவதைவிட குறைந்த செலவே ஆகிறது. இதற்கான கலப்பில்லா , முளைப்புத்திறன் அதிகமுள்ள நெல் ரகங்களை வீரசோழன் உழவன் உற்பத்தி நிறுவனம் ஐசிஐசிஐ பவுன்டேஷனுடன் இணைந்து வழங்கிவருகிறது. பாரம்பரிய நெல் ரகங்களை பரவலாக்கம் செய்யும் முனைப்புடன் நெல்லை வழங்கி வரும் இவர்கள் அதனை விலைக்கு தருவதற்கு பதிலாக, தரும் விதை நெல்லைவிட இரண்டு மடங்காக திரும்பப் பெற்று பாரம்பரிய ரகங்களை காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். ஐசிஐசிஐ பவுன்டேஷன் இதுவரை மயிலாடுதுறை மாவட்டத்தில் 3 டன் விதை நெல்லை வழங்கியுள்ள நிலையில், விவசாயி பாலமுருகன் மட்டுமே அதனை மாடியில் வளர்த்து பலனும் கண்டு சாதனையும் படைத்துள்ளார். இவரது செயல்பாடுகளை வேளாண் ஆர்வலர்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர். வரும் கால கட்டங்களில் விவசாயம் செய்வதற்கு நீர் பற்றாக்குறை குறைந்து விடும் என்ற நோக்கில் முற்போக்குச் சிந்தனையில் இந்த பாரம்பரிய விதைகளை குறைந்த நீர் செலவில் உருவாக்கினேன் என்று பாலமுருகன் கூறினார். இது போன்ற விவசாய திட்டத்தை இளைஞர்கள் கையில் எடுத்து மாடித்தோட்டத்தில் இதுபோன்று பயன்படுத்தி குறைந்த நீர் செலவில் பாரம்பரிய நெல் நாற்றங்காலை மீட்டெடுப்போம் என்ற முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

# மணல்மேடு அருகே 22 செம்மறி ஆடுகள் மர்மமான முறையில் உயிரிழப்பு



மயிலாடுதுறை அருகே கொட்டகையில் அடைக்கப்பட்டிருந்த 22 ஆண்டுகள் மர்மமான முறையில் இறந்தது குறித்து கால்நடை துறையினர் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு காவல் சரகம் புத்தகரம் நடுத்தெருவைச் சேர்ந்தவர் கலியபெருமாள் என்பவரின் மகன் முனியாண்டி (48) இவரும் இவரது குடும்பத்தினரும் மூன்று தலைமுறைகளாக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் 150 ஆடுகளை வளர்த்து பராமரித்து வரும் முனியாண்டி, 22 இளைய ஆடுகளை தனியாக அடைத்து வைத்துள்ளார். இந்நிலையில் இன்று காலை அங்கு சென்று பார்த்தபோது 22இளைய ஆடுகள் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளது. இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த முனியாண்டி, மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் பேரில் காவல் துறையினர் மற்றும் கால்நடை மருத்துவர் ராமபிரபா, கால்நடை வல்லுநர்கள் ஆடுகள் இறந்தது குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

## முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொலி காட்சி மூலம்

# சார்நிலை கருவூல அலுவலக

## கட்டிடத்தை திறந்து வைத்தார்




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி மூலம் மயிலாடுதுறை மாவட்டம் வள்ளாலகரத்தில் ரூ.97 லட்சத்து 10ஆயிரம் மதிப்பீட்டில் சார்நிலை கருவூல அலுவலக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா குத்துவிளக்கேற்றி வைத்து அலுவலக கட்டிடத்தை பார்வையிட்டார். வட்டம் வள்ளாலகரத்தில் சார்நிலை கருவூல மயிலாடுதுறை வட்டம் வள்ளாலகரத்தில் கருவூல் அலுவலக கட்டிடமானது தரை தளம், முதல் தளம் என 1535 சதுர அடி பரப்பளவில் ரூ99 லட்சத்து 10ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்த சார்நிலை கருவூல அலுவலக கட்டிடமானது திங்கள் கிழமை சென்னையிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா குத்துவிளக்கேற்றி வைத்து, அலுவலக கட்டிடத்தை பார்வையிட்டார்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

YouTube
சேனலில் பணிபுரிய ஆர்வமிருந்தால் அன்பர்கள் அணுகவும்.
(Editor, Content Writer & Speaker)
9597887847

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa | தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
உரக்க சொல்வோம்
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 26.2021 | கடலூர் | மலர்:10 இதழ்:15

# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூரில் இல்லம் தேடிக் கல்வி விழிப்புணர்வு வாகனம் தொடக்கம்

## கடலூரில், புத்தாடை வாங்க பொதுமக்கள் கூட்டம் அலைமோத தொடங்கியது



இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி வருகிற 4 ந்தேதி வியாழக்கிழமை கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகையை கொண்டாட கடலூர் நகர மக்கள் தயாராகி விட்டனர். தீபாவளி என்றாலே பட்டாசும், புத்தாடைகளும் தான் நினைவுக்கு வரும். இதை வாங்குவதற்காக நகரத்தை சுற்றியுள்ள கிராம மக்கள் அனைவரும் கடலூருக்கு வருகை தருவார்கள். ஆனால் இன்னும் பட்டாசு கடைகள் திறக்காத நிலையில், புத்தாடைகள் வாங்குவதற்காக பொதுமக்கள் நகர வீதிகளில் உள்ள ஜவுளி கடைகளுக்கு வரத்தொடங்கி விட்டனர். சிறிய ஜவுளி கடைகள் முதல் பெரிய ஜவுளி கடைகள் வரை சென்று தங்களுக்கு பிடித்தமான புத்தாடைகளை வாங்க தொடங்கி விட்டனர். இதனால் கூட்டம் அதிகரிக்க தொடங்கி வருகிறது. இந்த கூட்ட நெரிசலை பயன்படுத்தி திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டக்கூடாது என்பதற்காகவும், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும் நகர முக்கிய இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்து போலீசார் கண்காணிப்பார்கள். அதன்படி கடலூர் அண்ணா பாலம் அருகில் உள்ள சிக்னல், பஸ் நிலையம் நாகம்மன் கோவில் ஆகிய இடங்களில் தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அதில் ஒலிப்பெருக்கி மூலம் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்தக்கூடாது என்றும் அறிவுரை வழங்கி வருகின்றனர். விரைவில் மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட் பகுதியிலும் கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்து கண்காணிக்க உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

## கடலூரில் இல்லம் தேடிக் கல்வி விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சியர் தொடக்கி வைத்தார்.



கற்றல் இடைவெளியைக் குறைக்க இல்லம் தேடிக் கல்வித் திட்டம் குறித்தான விழிப்புணர்வு வாகனத்தை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சியர் கி. பாலசுப்பிரமணியம் தொடக்கிவைத்தார்.பின்னர், அவர் கூறியதாவது, தமிழக அரசு இல்லம் தேடிக் கல்வி எனும் திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், கரோனா தொற்றுக் காலங்களில், அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளைச் சரி செய்வதாகும்.இந்தத் திட்டத்தைச் செம்மையாக செயல்படுத்துவதன் மூலமே மாணவர் கள் வரும் கல்வியாண்டில் அடுத்த வகுப்புக்குச் செல்லும் போது, அவர் கள் முழு தகுதி படைத்தவர்களாக இருப்பர். நிகழ் கல்வியாண்டு 6 மாதங்களுக்கு நாள்தோறும் குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரம் தன்னார்கலர்களின் மூலம் மாணவர் களை அன்றாடக் கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் படிப்படியாகப் பங்கேற்கச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தை அனைவருக்கும் கொண்டு செல்ல கலைக் குழுவினர் உதவியுடன் கிராமங்களில் சைக்கிள் பேரணி, வீதி நாடகம், பொம்மலாட்டம், கதை சொல்லுதல், திறன் மேம்பாட்டுச் செயல்பாடு ஆகியவை நடைபெறவுள்ளன என்றார் அவர்.நிகழ்ச்சியில் இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் உதவி திட்ட அலுவலர் எல்லப்பன், வட்டாரக் கல்வி அலுவலர்கள் செல்வம் இளஞ்செழியன் அந்தோணிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

## கடலூரில் வீர, தீர செயல்களின்போது உயிரிழந்த போலீசாருக்கு

## 63 துப்பாக்கி குண்டுகள் முழங்க அஞ்சலி



நாடு முழுவதும் காவல்துறை பணியில் வீர, தீர செயல்களின்போது உயிரிழந்த போலீசாருக்கு வீரவணக்க அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 21 ந்தேதி கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி கடலூர் மாவட்ட காவல்துறை சார்பில் கடலூர் ஆயுதப்படை வளாகத்தில் உள்ள ராணுவ நினைவு தூண் முன்பு வீரவணக்க நாள் அனுசரிக்கப்பட்டது.இதில் கடலூர் மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம், போலீஸ் சூப்பிரண்டு சக்திகணேசன் ஆகியோர் கலந்துகொண்டு பணியின்போது வீரமரணம் அடைந்த 377 போலீசாரின் நினைவு தூணிற்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியின் போது பணிக்காலத்தில் வீரமரணம் அடைந்த போலீசார் மற்றும் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்த காவல்துறையினருக்கு ஆயுதப்படை இன்ஸ்பெக்டர் முத்துகுமரன் தலைமையில் 63 குண்டுகள் முழங்க வீரவணக்க அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் நாடு முழுவதும் வீரதீர செயல்களில் ஈடுபட்டும் , நோய்த்தொற்று தடுப்பு பணியில் ஈடுபட்டும் உயிரிழந்த போலீசார் நினைவு கூரப்பட்டனர். பின்னர் போலீசார் கடற்கரையானாலும், பனிமலை சிகரமானாலும் காவலர் பணி இடர் நிறைந்தது. உனது வருங்காலத்திற்கு எனது தற்காலத்தை ஈந்தேன். நாளைய உன் விடியலுக்கு இன்று நான் மடிய தயார் என்று கூறி இந்தாண்டு இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் உயிரிழந்த 377 போலீசார் விட்டு சென்ற பணிகளை செய்து முடிப்போம் என்று உறுதி பூண்டு, அவர்களின் வீர தியாகம் வீண்போகாது என்று அனைத்து போலீசாரும் உறுதிமொழி ஏற்றனர். இதில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு அசோக்குமார், துணை போலீஸ் சூப்பிரண்டு கரிகால் பாரி சங்கர், மத்திய சிறை ஜெயிலர் அப்துல் ரகுமான், மாவட்ட தீயணைப்பு துறை அலுவலர் லோகநாதன், தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் செந்தில்விநாயகம், இன்ஸ்பெக்டர் குருமூர்த்தி, சப்—இன்ஸ்பெக்டர் அருணாச்சலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திட்டக்குடி பகுதியில் தொடர் மழை:நெல் முளைத்து சேதம்



திட்டக்குடி அருகே உள்ள கொட்டாரம் கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் கொட்டாரம், ஆவினங்குடி, செங்கமேடு , வையங்குடி உள்பட 10 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த நெல்லை விற்பனை செய்து வருகின்றனர். அதன்படி விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த சுமார் 3 ஆயிரம் நெல் மூட்டைகளை அதிகாரிகள் அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அடுக்கி வைத்திருந்தனர். ஆனால் சேமிப்பு கிடங்கிற்கு அனுப்பி வைக்காமல் கடந்த ஒரு மாதமாக வெயில், மழையில் நனைந்து வந்தது. தற்போது திட்டக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருவதால், அந்த நெல் மூட்டைகள் அனைத்தும் நனைந்து வீணாகி விட்டது. சில நெல் மூட்டைகள் முளைத்தும், சில மூட்டைகளில் இருந்தநெல் அழுகியும் சேதமடைந்து உள்ளது. நெல் மூட்டைகளை எலி, கோழி, பன்றிகளும் வீணாக்கி வருகிறது. இதனால் கொள்முதல் செய்த நெல் மூட்டைகள் அனைத்தும் வீணாகி அரசுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் அலட்சியமாக இருந்ததே இதற்கு காரணம் என்று விவசாயிகள் குற்றம் சாட்டி உள்ளனர். மேலும் அலட்சியமாக இருந்த அதிகாரிகளிடம் இருந்து இந்த இழப்பீட்டு தொகையை பிடித்தம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஆகவே நெல் மூட்டைகளை வீணாக்காமல் , கொள்முதல் செய்தவுடன் சேமிப்பு கிடங்கிற்கு அதிகாரிகள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து கொள்முதல் நிலையங்களையும் அவ்வப்போது அதிகாரிகள் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்

# கண்காணிப்பு அலுவலர் அன்சுல் மிஸ்ரா



வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. இதற்கு சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரும்இ கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான அன்சுல் மிஸ்ரா தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர் அன்சுல் மிஸ்ரா கூறுகையில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு கடலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். நீர் நிலைகளின் கொள்ளளவை தொடர்ந்து கண்காணித்து, அதற்கு ஏற்றார்போல் தண்ணீரை வெளியேற்ற வேண்டும். மாவட்டத்தில் மழைவெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தாழ்வான பகுதிகள், மிக தாழ்வானவை என 278 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட அனைத்துத்துறை அதிகாரிகளும் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும் புயல் பாதுகாப்பு மையம், பல்நோக்கு மையம் மற்றும் தற்காலிக தங்குமிடம், பேரிடர் காலத்தில் பொதுமக்கள் தங்க வைக்கப்படவேண்டிய இடங்களில் குடிநீர்இ உணவு, கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். முகாம்களில் தங்க வைக்கப்படும் பொது மக்களுக்கு உணவு தயாரிக்க தேவையான அரிசி, பருப்பு, பால் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களை தயாராக வைத்திருக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் பணிபுரிய தயார் நிலையில் இருக்கவேண்டும். அவசர சேவை ஊர்திகளும், வெள்ளப்பாதிப்பு ஏற்படும் நிலையில் பொதுமக்களை பாதுகாத்து மீட்டு வருவதற்கு படகுகளையும், பொதுமக்களை பாதுகாப்பு மையத்திற்கு அழைத்து செல்வதற்கு தேவையான வாகனங்களையும் தயார் நிலையில் வைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.பின்னர் கண்காணிப்பு அலுவலர் அன்சுல் மிஸ்ரா, கலெக்டர் அலுவலகத்தில் இயங்கிவரும் பேரிடர் தொடர்பான தகவல் கட்டுப்பாட்டு அறையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து கடலூர் பேரிடர் கால வானொலி 107.8 பண்பலை அலைவரிசையில் உரையாற்றினார். அதனை தொடர்ந்து கண்காணிப்பு அலுவலர் அன்சுல் மிஸ்ரா, கடலூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்திற்கு சென்று, அங்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு உபகரணங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### கடலூர்: 300 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள்

# தண்ணீரில் மூழ்கின....



சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், தமிழ் மாநில காங். கட்சியின் சிதம்பரம் நகர தலைவருமான ரஜினிகாந்த் தமிழ்நாடு முதல்வருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், !சிதம்பரம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்தின் கழிவுநீர் திட்ட அறிக்கையின்படி நகராட்சிக்கு சொந்தமான சுத்திகரிப்பு பண்ணையில் சுத்திகரிக்கப்பட்டு பின் அப்பகுதியில் உள்ள நகராட்சி புல் பண்ணைகளுக்கு தண்ணீர் பரவச் செய்வது என்பதுதான் திட்ட அறிக்கை. தற்போது லால்புரம் பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிக்கும் இடத்திலிருந்து நேரடியாக அருகிலுள்ள பாசிமுத்தான் ஓடை, சிவகாமசுந்தரி ஓடையில் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் இந்த வாய்க்காலின் கிழக்குப் பகுதி பாசன வாய்க்கால் மூலம் தில்லைநாயகபுரம், கீழமூங்கிலடி, மடுவங்கரை, குண்டுமேடு தில்லைவிடங்கன், கீழ் அனுவம்பட்டு , மேல் அனுவம் பட்டு, நஞ்சமகத்து வாழ்க்கை, புஞ்சமகத்து வாழ்க்கை, மானம்பாடி, கீழச்சாவடி போன்ற 20 க்கும் மேற்பட்ட கிராமங்கள் முழுவதும் பாதிப்படைகின்றன. ஏற்கனவே இந்தப் பகுதியானது வெள்ளாற்றின் மூலம் உப்புநீர் சூழ்ந்து நிலத்தடி நீர் உப்புத் தன்மை ஏற்பட்டு குடிநீர் பஞ்சத்திற்கு ஆளாகியுள்ளது. நீண்டநாள் கோரிக்கையாக தடுப்பணை வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தற்போது பொதுப்பணித்துறை மூலமாக ஆதிவராக நல்லூரில் அதற்கான வேலை துவங்கும் நிலையில் உள்ளது . கிழக்கு பகுதி கிராமங்களைக் கணக்கில் கொள்ளாமல் மேற்கு பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால் கடலின் உப்புநீர் உள்நுழையும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்தக் கழிவுநீர் கலப்பதால் மீண்டும் நிலத்தடி நீர் மாசுபட்டு குடிநீருக்கு மோசமான பஞ்சம் ஏற்படுகின்ற நிலை ஏற்படும். இதனால் விளைநிலங்கள் பாதிக்கப்படும், மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொள்ளும் முதல்வர் அவர்கள் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்

## ஸ்ரீமுஷ்ணத்தில் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி



தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்தின் மனைவியும், அக்கட்சியின் பொருளாளருமான பிரேமலதா விஜயகாந்த் தனது மூத்த மகன் விஜய பிரபாகரனுடன் கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பூவராகசுவாமி கோவிலுக்கு வந்து, சாமி தரிசனம் செய்தார். அதைத்தொடர்ந்து அவர் , தே. மு. தி. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்னதான நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: நாளுக்கு நாள் அதிகாத்து வரும் பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் விலை உயர்வை சமாளிக்க முடியாமல் சாமானிய மக்கள் தவித்து வருகிறார்கள். விலையை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இது கண்டிக்கத்தக்க விஷயம் . செங்கல், சிமெண்டு, ஜல்லி, கம்பி உள்ளிட்ட கட்டுமான பொருட்களின் விலையும் 40 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது. இதனால் அடித்தட்டு மக்கள் மட்டுமல்லாமல், நடுத்தட்டு மக்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே மத்திய, மாநில அரசுகள் உடனடியாக விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்று குறைவான நாட்களே ஆகி இருப்பதால் இப்போதைக்கு சாதகமும் இல்லை. பாதகமும் இல்லை. இவ்வாறு பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

### விருத்தாசலம் அருகே கைக்குழந்தையுடன்

## போராடி காதலனை கரம் பிடித்த

# இளம்பெண்



விருத்தாசலம் அருகே உள்ள முதனை கிராமத்தை சேர்ந்தவர் ஏழுமலை. இவருடைய மகள் சந்தியா, வயது(26) இவரும், அதே பகுதியை சேர்ந்த கோவிந்தசாமி மகன் வேல்முருகன் (36) என்பவரும் கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்தனர். இதில் சந்தியா கர்ப்பமானார். இதையடுத்து அவர், வேல்முருகனிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வலியுறுத்தினார். ஆனால் அவர் பல்வேறு காரணங்களை கூறி தட்டிக்கழித்து வந்ததாக தெரிகிறது. இதனிடையே சந்தியாவிற்கு கடந்த 10 ந் தேதி பெண் குழந்தை பிறந்தது. இதையடுத்து அவர், தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி வேல்முருகனிடம் கூறியுள்ளார். ஆனால் வேல்முருகனின் தாயார், தங்கை, தங்கையின் கணவர் ஆகியோர் சந்தியாவிடம் வரதட்சனை கேட்டுள்ளனர். இது குறித்து சந்தியா ஊ . மங்கலம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வேல்முருகனை அழைத்து அறிவுரை வழங்கினர். இதையடுத்து வேல்முருகன் சந்தியாவை திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொண்டார். அதனை தொடர்ந்து கொளஞ்சியப்பர் கோவிலில் இருவருக்கும் திருமணம் நடந்தது. இதில் குழந்தையின் முன்பு அவர்கள் திருமணம் செய்து கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

### சிறுபாக்கம் அருகே லாரி மீது மினிலாரி மோதியதில் தீ விபத்து

# வியாபாரி சிக்கி பரிதாபமாக இறந்தார்



விருத்தாசலம் அருகே முல்லா தோட்டத்தை சேர்ந்தவர் ராஜாமுகமது வயது (60)காய்கறி மொத்த வியாபாரி. இவர் நேற்று அதிகாலை சேலம் மாவட்டம் தலைவாசலில் உள்ள மார்கெட்டில் காய்கறிகளை ஏற்றுவதற்காக விருத்தாசலத்தில் இருந்து மினிலாரியில் புறப்பட்டார். மினி லாரியை சித்தலூரரை சேர்ந்த மணிகண்டன் (41) என்பவர் ஓட்டினார். விருத்தாசலம் — சேலம் சாலையில் சிறுபாக்கம் சோதனைச் சாவடி அருகே வந்த போது, நெய்வேலியில் இருந்து நிலக்கரி ஏற்றிக் கொண்டு லாரி ஒன்று முன்னால் சென்று கொண்டிருந்தது. இந்த லாரி மீது எதிர்பாராதவிதமாக மினிலாரி பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் மினி லாரி திடீரென தீப்பிடித்து எரிந்தது.இதில் ராஜாமுகமது சிக்கி தீயில் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். மணிகண்டன் பலத்த காயமடைந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக விருத்தாசலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனிடையே இது பற்றி தகவல் அறிந்து வந்த வேப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலர் சண்முகம் தலைமையிலான வீரர்கள், மினிலாரி மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இந்த சம்பவத்தால், விருத்தாசலம் — சேலம் சாலையில் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது குறித்த புகாரின் பேரில் சிறுபாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969